**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 60/2026**

**PW - 3**

| | | |
|---|---|---|
| Name | : | பிரேம்குமார் ( LW. 3 ) |
| Father's / Husband Name | : | த/பெ.சம்பத் |
| Village | : | கொண்டங்காட்டுர் |
| Taluk | : | திருச்செங்கோடு |
| Calling | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **08.06.2026** தேதியில் திரு.ஞானவேல், இளநிலை உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.**

**(எதிரி ஆஜர்.)**

**முன் விசாரணை:–**

1) நான் தற்போது கொண்டங்காட்டுர், நாமக்கல்லில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 11.12.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் எது அம்மாவை பார்க்க மாணிக்கம்பாளையம் சென்று கொண்டிருந்தேன். மாணிக்கம்பாளையம் அரசு மேல் நிலைப்பள்ளிக்கு அருகில் பூபதி ராஜா அவரது மனைவி நித்யா, ஆஜர் எதிரி பழனிசாமி ஆகியோர் வாய்சண்டை செய்து கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் அவ்வாறு சண்டைக்கு பிறகு கிளம்பி சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) வழக்கு சம்பவத்தின் போது நாமக்கல், பொதுப்பணித்துறை அலுவலகத்தில் இரவு காவலர் பணியினை மேற்கொண்டு வந்தேன். எனது பணி நேரம் மாலை 06.00 முதல் காலை 09.00 மணி என்றால் சரியல்ல, காலை 07.30 மணி வரை மட்டும். அப்போது நான் நாமக்கல்லில் தங்கி தான் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரி. பூபதி ராஜா அவரது மனைவி நித்யா ஆகியோர் ஆஜர் எதிரி பழனிசாமியின் வீட்டில் குடியிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவத்தின் போது நான் நாமக்கல்லில் தங்கி பணிபுரிந்து வந்ததால் புகார்தாரருக்கும், எதிரிக்கும் எதற்காக தகராறு நடந்து என்பது எனக்கு தெரியாது என்றால் சரி. இன்று சாட்சியம் அளிக்க பூபதி ராஜா, அவரது மனைவி நித்யா ஆகியோர் என்னை அழைத்திருந்தார்கள் என்றால்

சரியல்ல. போலிசார் தான் அழைதது வந்தார். இன்று பூபதி ராஜா, அவரது மனைவி நித்யா ஆகியோர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள் என்றால் சரி. பூபதி ராஜா எனது நண்பர் என்றால் சரி. நான் முன் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவத்தையும் நான் பார்க்கவில்லை என்றும், பூபதி ராஜா எனது நண்பர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**